2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

கொள்முதல் நிலையம்

**1943—திரு. ஆர். சாமி:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை எண் 20, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 16-2-2012-ன்படி கொப்பரை மட்டுமே தென்னை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தேங்காய், கொள்முதல் செய்யப்படுவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதி, முழுக்க முழுக்க 100 சதவிகிதம் விவசாயத்தை நம்பியே இருக்கின்ற தொகுதி. கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் ஏறத்தாழ 8,500 ஏக்கரிலே தென்னை விவசாயம் செய்து அந்தப் பகுதி விவசாயிகள் தென்னை மரத்தை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே யாரும் செய்திராத அளவுக்கு விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்ற நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அம்மா அவர்கள் விவசாயிகளை முன்னிலைப்படுத்தி இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தைக் கொண்டு வருவதற்காகப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். கூட்டுறவுத் துறைமூலமாக தேங்காய் கொள்முதல் செய்தால், விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து கொட்டாம்பட்டி ஒன்றியத்திலே தேங்காய் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், உலர்கலன் வசதி CMC-இல் இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல; தேங்காயைக் கொப்பரையாக மாற்றக்கூடிய உள் கட்டமைப்பு வசதியும் அந்த விற்பனைச் சங்கம் பெற்றிருக்க வேண்டும். அதோடு, கொப்பரை கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்றால், வேளாண் துறை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து பேசி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்படி, TANFED புதிய கொப்பரை கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு முன்வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, மதுரை, மேலூர் தொகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையின்பேரில் தேங்காய் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தால் முடிந்து விடும் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கிறாரே?

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காய் திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, பல்லடம்,

2012 ஏப்ரல் 27]

காங்கேயம், வெள்ளக்கோயில் போன்ற பகுதிகளிலே கொள்முதல் செய்யப்படுகிறது. மேலூர் பகுதியைப் பொறுத்தவரையில், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்வதற்கு வாய்ப்பில்லை. சாதாரண தேங்காய்தான் அந்தப் பகுதியிலே விளைந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தேங்காய் விலை 2 ரூபாய், 3 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்துள்ளதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 10 ரூபாய் அளவிற்கு விற்றால்தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கும். தனியார்கள் ஒரு சங்கம், அசோசியேஷன் அமைத்துக் கொண்டு விவசாயிகளை நசுக்குவதற்காக 3 ரூபாய், 4 ரூபாய் விலைக்கு ஏலத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக நம்முடைய அம்மா அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொட்டாம்பட்டி ஒன்றியத்திலே தேங்காய் கொள்முதல் நிலையத்தைத் தொடங்கினால் விவசாயிகளுக்கும் இலாபம் இருக்கும்; கூட்டுறவுச் சங்கத்திற்கும் இலாபம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். கூட்டுறவுச் சங்கம்மூலமாகப் பொங்கல் பண்டிகையின்போது கரும்பு வியாபாரம் செய்கின்றார்கள். அதேபோல, இந்தத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழ்நாட்டில் கூட்டுறவு வேளாண் உற்பத்தியாளர் விற்பனைச் சங்கத்தின்மூலமாக இதுபோன்ற கோரிக்கைகள் அவ்வளவாக வரவில்லை. விவசாயிகளிடமிருந்து முழுத் தேங்காயை இதுவரை கொள்முதல் செய்யவும் இல்லை. இருந்தாலும், உறுப்பினருடைய வேண்டுகோளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல் போன்ற

மாவட்டங்களில் விவசாயிகள் கோடிக்கணக்கான தென்னை மரங்களை வளர்க்கிறார்கள். இவ்வாண்டு விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கக்கூடிய தேங்காய்க்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதனால் விவசாயிகள் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். எனவே, கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய்க்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கக்கூடிய முறையில், அரசே தேங்காய் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை விற்பனைச் சங்கங்கள்மூலமாக தேங்காய் கொள்முதல் செய்யப்படவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், தேங்காய் விலை வீழ்ச்சி குறித்த அந்தப் பொருள் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சருடைய subject-இல் வரும். அதைத் தனிக் கேள்வியாகப் போடவும். கொள்முதல் அமைப்புகள் குறித்து மட்டும் துணைக் கேள்வி கேட்டால், அதற்குண்டான பதில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

முற்பகல் 10-20

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கொங்கு மண்டலம் முழுவதும் தென்னைதான் பிரதான விவசாயமாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு எதிர்பாராத வகையில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்திருக்கின்ற நிலையிலே, நியாய விலைக் கடைகளிலே பாமாயிலுக்குப் பதிலாக ஆரோக்கியத்திற்கு மிக உயர்ந்த தேங்காய் எண்ணெயை

2012 ஏப்ரல் 27]

விநியோகிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விளைகின்ற தேங்காயில், oil contents குறைவாக இருக்கிறது. கேரளாவில் அதிகமாக இருக்கிறது. கேரளாவில் இருக்கின்ற ஒவ்வொரு சங்கமும் ஓரளவிற்கு வசதி படைத்ததாக, infrastructure மற்றும் தேங்காயை ஆயிலாக மாற்றக்கூடிய அந்த machineries வைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரை அதுமாதிரி இல்லை. எதிர்காலத்தில் அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகளைப் பரிசீலித்து அதற்கான ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உற்பத்தியில் முன்னணியில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் தேனி மாவட்டமும் ஒன்று. இங்குப் பெரும்பாலான விவசாயிகள் அதையே சார்ந்திருக்கிறார்கள். ஆனால், தேனி மாவட்டத்தில் கொப்பரைக் கொள்முதலுக்கான நிலையம் முன்பு தொடங்கப்பட்டது தற்போது செயல்படவில்லை. இப்போது அந்தப் பகுதி விவசாயிகள் தேங்காய் கொள்முதல் அல்லது கொப்பரைக் கொள்முதல் இவற்றில் எதைச் செய்தாலும் தங்களுக்கு உதவியாக இருக்கும்; விலை கட்டுப்படியாகும் என்று கருதுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஒன்று கொப்பரைத் தேங்காய் அல்லது தேங்காய் கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு புதிய முயற்சியை எடுத்தால், விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்கிறார். குறிப்பாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக இதுமாதிரி விற்பனை தொடங்க வேண்டுமானால், குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 10,000 காய்கள் வரவேண்டும். அப்படி வந்தால்தான் ஓரளவுக்கு அது இலாபகரமாக இருக்கும். இப்போது தேனிக்குப் பக்கத்திலே திண்டுக்கல்லில் திறக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கின்ற விவசாயிகள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும், எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. 'பெற்ற பிள்ளை சோறுபோடவில்லை என்று சொன்னாலும் வைத்த பிள்ளை சோறுபோடும்' என்ற நம்பிக்கையிலே விவசாயிகள் அதிக அளவில் தென்னையைப் பயிரிடுகிறார்கள். தென்னை விவசாயிகளுக்குப் போதிய வருமானம் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இளநீரைக் கொள்முதல் செய்து, காகிதப் பெட்டியிலே அடைத்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? பூமியில் உள்ள நீருக்கு ஏற்றவாறு, நிலத்திற்கு ஏற்றவாறு இளநீரின் சுவை மாறுபடுகிறது. எனவே கிடைக்கின்ற இளநீரை ஒன்று சேர்த்து, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன், இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை, கொள்முதல் நிலையம் அதாவது—Procurement Centre— அமைக்கப்படுமா என்பதுதான். Coconut water என்பது நல்லதொரு product-தான். அதை market செய்வதற்குத் தனியாகக் கேள்வி போடுங்கள். அதற்கு இப்போது அமைச்சரிடம் பதில் இருக்காது. (குறுக்கீடு) தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

2012 ஏப்ரல் 27]

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பது குறித்து ** ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, மேலூரிலே ஒரு கொள்முதல் நிலையத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறோம். உறுதியாக அது நடக்கும். திரு. லாசர் அவர்களும்கூட ஒரு கருத்தைச் சொன்னார். இப்போது உத்தமபாளையத்தில் Solar Drying Unit ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போதுள்ள புதிய திட்டத்தின்படி அதைப் போட்டிருக்கிறோம். எனவே, அதி விரைவிலே உத்தமபாளையத்தில் இயங்க இருக்கிறது. பெரியகுளம் விவசாயிகள்கூட அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாகத் தமிழ்நாட்டு விவசாயிகள் அரசே தேங்காயை கொள்முதல் செய்யவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இன்றைக்குக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கூடிய விரைவில் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை நமது மாநிலத்தில் எவ்வளவு டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது? நியாய விலைக் கடைகளில் தேங்காய்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எண்ணெய் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், தேங்காய் எண்ணெயில் கொழுப்புச் சத்து இருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. கொழுப்புச் சத்து இருக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கோரிய புள்ளிவிவரம் குறித்து தனியாகக் கேள்வி போடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா விதத்திலேயும் தமிழகத்தை முதல் நிலை மாநிலமாக உயர்த்துவேன் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், நம்மைவிட சிறிய மாநிலமாக இருக்கிற கேரள மாநிலத்தில், தேங்காயைக் கொள்முதல் செய்கிறார்கள். தேங்காய் எண்ணெயை அவர்களே உற்பத்தி செய்து, வெளியே விநியோகிக்கிறார்கள். தமிழகத்திலேயும் அதிகமாகத் தேங்காயைக் கொள்முதல் செய்து, தேங்காய் எண்ணெயை நியாய விலைக் கடைகள்மூலம் வழங்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டேன். கேரளாவில், தேங்காயில் இருக்கின்ற oil contents அளவுக்கு அதிகமாக இருக்கிறது. அதிக quantity-யும் கிடைக்கிறது. இன்னொன்று, அரசாங்கம் தேங்காயைக் கொள்முதல் செய்வதில்லை. சங்கங்கள்தான் செய்கின்றன. அந்தச் சங்கத்தினுடைய வருவாயைக் கருத்தில்கொண்டும், நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும்தான் இந்தச் சங்கங்கள் கொள்முதல் செய்கின்றன.

தேங்காயில் இருக்கக்கூடிய Oil Contents இரண்டு, மூன்று சதவிகிதம் கேரளாவிற்கும், நமக்கும் குறைவாக இருக்கிறது. Oil Contents குறைவாக இருக்கிறதனால், இதுவரை அந்த மாதிரி

கருத்துரு ஏதும் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வளவு விருப்பத்தோடு கேட்கிறீர்கள் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்கள், எதிலும் உண்மையாக, இதுவரை விவசாயிகளுக்கு எந்த ஓர் அரசும் செய்யாத சாதனையை செய்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இதையும் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் வருகிற 2023-இல் மாநிலத்தை, இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகக் கொண்டு செல்லவேண்டுமானால், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்பதை அம்மா அவர்கள் தெரிந்து, இன்றைக்கு அளப்பரிய சாதனையை, இதுவரை எந்த ஓர் அரசும் செய்யாத சாதனையை, அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிற இந்தக் கருத்துரு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நிறைய பேர் கையைத் தூக்குகிறீர்கள். இன்னும் எத்தனை பேர் தேங்காய் உரிப்பீர்கள் என்று தெரியவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் வினா கேட்கின்றபோது, சிறிய மாநிலமாக இருக்கிற கேரள மாநிலத்தில் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து, பெரிய அளவில் விற்பனை செய்யப்படுகிறது என்றும் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் காங்கேயம் பகுதியில்தான் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை பேரும் எண்ணெய் வாங்கவேண்டுமென்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கேரளாவைக் காட்டிலும் இன்றைக்கு விற்பனையை நிர்ணயிக்கக்கூடிய ஒரே இடம் காங்கேயம் என்பதை முதலிலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேரளாவில் உற்பத்தியாகக்கூடிய தேங்காயில் தமிழகத்தைவிட மூன்று சதவிகிதம் எண்ணெய்ச் சத்து கூடுதலாக இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குண்டான காரணம் என்ன என்பதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏதாவது ஆராய்ச்சி செய்திருக்கிறதா? அடுத்து, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர்,* research *செய்து* contents *எவ்வளவு,* quality *எல்லாம் எவ்வளவு என்பதற்கு*—separate question *போடுங்கள்.* Please sit down. *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் அதிகமாக தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. அங்குள்ள தேங்காய் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், உங்களைப் பார்த்தாலே நன்றாகத் தெரிகிறது! (சிரிப்பு)*

முற்பகல் 10-30

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *பெரிய தேங்காயாகவும், இங்கு உறுப்பினர்கள் கூறியதைப்போல, உண்மையிலேயே எண்ணெய்* contents *அதிகமாக இருக்கக்கூடிய தேங்காய்தான் குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் முன்பெல்லாம் இந்தத் தேங்காய்களை* TANFED *மூலமாகக் கொள்முதல் செய்துகொண்டிருந்தார்கள். இப்போது கூட்டுறவுத் துறை மூலமாக இந்தத் தேங்காயைக் கொள்முதல் செய்து, அதிலிருந்து எண்ணெய் எடுத்து, தமிழகத்திலுள்ள ரேஷன் கடைகள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. குமரி மாவட்டம் தேங்காய்க்குப் பெயர் பெற்ற மாவட்டம். குமரி மாவட்டத்தில் ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்பும் கருத்து என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கும், தேங்காயிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கும் வசதியாகவும், இலாபகரமாகவும் இருக்கும் என்று கருதுமேயானால், அதன் மூலமாகக் கருத்துரு பெற்று அனுப்பினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதன்மீது நடவடிக்கை எடுத்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

மண் குன்றுகள்

***3267—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு பொதுப் பணி துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தியாறு அணையில் உள்ள மண் குன்றினை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, சாத்தியாறு அணையிலுள்ள மண் குன்றுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். இந்த நீர்த்தேக்கத்திலுள்ள குன்றுப் பகுதியை ஆழப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு இருப்பின், இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*